ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2190/26 - 2020 අගෝස්තු මස 25 වැනි අඟහරුවාදා - 2020.08.25

*2190/26 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்த மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு - 6 ஆம் திருத்தம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1887/21 மற்றும் 2014.11.05 ஆந் திகதிய, இல. 1905/07 மற்றும் 2015.03.09 ஆந் திகதிய, இல. 2006/53 மற்றும் 2017.02.17 ஆந் திகதிய, இல. 2049/14 மற்றும் 2017.12.12 ஆந் திகதிய, இல. 2138/27 மற்றும் 2019.08.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமான அறிவித்தல்களினால் திருத்தப்பட்ட, இல. 1836/6 மற்றும் 2013.11.11 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமான அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,*

**எம். ஏ. பி. தயா செனரத்,**
செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*2020, ஓகத்து 20.*

இலங்கை பொறியியல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு *10.1.1, 10.2.1, 10.3.2* மற்றும் *11.3* பந்திகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது :

***10.1*** **தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவி உயர்த்துதல் :**

*10.1.1* சாதாரண செயலாற்றுகையின் பிரகாரம்-

*10.1.1.1*(vii) ஆம் பிரிவு இலங்கை பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது.

**10.2 தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவி உயர்த்துதல் :**

10.2.1 பூரணப்படுத்தப்பட வேண்டிய தகைமைகள் :

(iv) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் பூரண அங்கத்துவம் அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றின் பூரண அங்கத்துவத்தைப் (பட்டய பொறியியல் நிலைமை) பெற்றிருத்தல் மற்றும் அந்தப் பட்டய பொறியியல் நிலைமையை தொடர்ச்சியாகப் பேணியிருத்தல்.

10.3.2 பதவி உயர்த்தும் முறை :

10.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்புக்கு அமைய ஒவ்வொரு வருடத்திலும் யூலை மாதம் 01 ஆந் திகதி மற்றும் சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய விசேட தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்வு வழங்கப்படும்.

**குறிப்பு :**

1. (i) சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள ஏதேனுமொரு தொகுதியில் நிலவும் வெற்றிடங்களுக்காக பதவி உயர்வு வழங்கும்போது வெற்றிடங்கள் கணக்கிடப்படும் திகதிக்கு அந்தத் தொகுதியில் உள்ள தரம் I உத்தியோகத்தர்களின் சேவை மூப்புக்கு அமைய ஏற்புடைய வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கு எண்ணிக்கையை விஞ்சாத 10.3.1 இன் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

   (ii) சில தொகுதிகளின் பொதுவான பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்காக பதவி உயர்வு வழங்கும்போது, வெற்றிடங்கள் கணக்கிடப்படும் திகதிக்கு அந்தத் தொகுதிகளில் உள்ள தரம் I உத்தியோகத்தர்களின் பொதுவான சேவை மூப்புக்கு அமைய வெற்றிடங்கள் கணக்கிடப்படும் திகதிக்கு நிலவும் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கு எண்ணிக்கையை விஞ்சாத 10.3.1 இன் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

2. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் உத்தியோகத்தர்களின் அடிப்படைத் தகைமைகள் மற்றும் சேவை மூப்பு என்பன மாத்திரம் நேர்முகப் பரீட்சைச் சபையினால் பரிசீலிக்கப்படும்.

3. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 70 இற்கு அமைவாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை, சபையொன்றினால் தகைமைகளைப் பரீட்சித்த பின்னர் சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுகளின் பிரகாரம் வெற்றிடங்கள் கணக்கிடப்படும் திகதிக்கு 1 ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்பு தொடர் ஒழுங்குக்கு ஏற்ப வெற்றிடங்கள் கணக்கிடப்படும் திகதிக்கு விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களுக்குச் சமமான உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்படுவர்.

11.3 தெரிவுசெய்யப்படும் முறை :

(அ) அவ்வாறே தொடர்ந்திருக்கும்
(ஆ) அவ்வாறே தொடர்ந்திருக்கும்
(இ) அவ்வாறே தொடர்ந்திருக்கும்
(ஈ) விசேட தரத்தின் அனுமதிக்கப்பட்ட பதவிகள்

விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிர்வாக அதிகாரியினால் பதவி வெற்றிடங்கள் விளம்பரம் செய்யப்பட்டு விசேட தரத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் 70 இற்கு அமைவாக நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் சேவை மூப்பு மற்றும் பொறியியல் பாடங்கள் தொடர்பில் பெற்றுள்ள விசேட அல்லது நிபுணத்துவ அறிவை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் திட்டத்திற்கு அமைய பரீட்சித்து பின்னர் சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுகளுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

09-207

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.